பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி வரு சித்திரை மீ 10 உ. செவ்வாய்க்கிழமை [23-04-1991] UTHAYAN—A Lively National Tamil Daily சுடர்: 140

# வடக்கு கிழக்கு புனரமைப்பு நிதியில் சிங்களக் குடியேற்றம்!

## திருகோணமலையில் மும்முரம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளுக்கு அனுப்பப்பட்ட நிதியில் 90 வீதமான பணம் திருகோணமலையில் சிங்களவர்களின் வீடுகள், கடைகளைப் புனர் நிர்மாணம் செய்ய பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த ஜூன் மாதம் இராணுவ நடவடிக்கை ஆரம்பமான பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணசபைக்கு அனுப்பப்பட்டுள்ள புனர்வாழ்வு நிதி திருகோணமலையில் மட்டுமே செலவிடப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த நவம்பர் மாதம் ஜனாதிபதி திரு. பிரேமதாஸா திருமலைக்கு விஜயம் செய்த பின்னரே புனரமைப்பு நிதி அதிகளவில் பயன்படுத்தப்பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

ஜனாதிபதியின் விசேட உத்தரவையடுத்து வடமத்திய மாகாண சபை முதலமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேராவின் மேற்பார்வையில் இந்த புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஆனையிறவில் ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 23

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை 6 மணி முதல் தொடர்ந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

தட்டுவன்கொட்டி பகுதியை நோக்கியே அதிக ஷெல்கள் ஏவப்பட்டன என்றும் அப்பகுதியில் பல வீடுகள் சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

## கிளிநொச்சியில் கிரேசிக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஏப். 23

கடந்த வெள்ளியன்று மன்னார் பரப்புக் கடந்தானில் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த தளபதி லெப்டினன்ட் கேர்ணல் கிரேசிக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பூரண துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

தளபதி கிரேசியின் புகழுடல் கடந்த திங்களன்று அவரது சொந்த ஊரான வட்டக்கச்சிக்கு எடுத்து வரப்பட்டது. அங்கு மக்கள் வயது வேறுபாடின்றி கூடி நின்று, கதறி அழுது அஞ்சலி செலுத்தினர். அஞ்சலிக் கூட்டம் ஒன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காமினி திஸநாயக்கா கைது!

## பிணையில் செல்ல அனுமதி

கொழும்பு, ஏப். 23

முன்னாள் அமைச்சரும் தற்போதைய ஆளும் கட்சி எம். பியுமான காமினி திஸநாயக்கா கடந்த சனியன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

பின்னர் அவர் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.



காமினி திஸநாயக்கா

பேராசிரியர் ராக்ப் புல்ஜின்ஸ் 1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் இனந்தெரியாத சிலரால் கடத்தப்பட்டு மூன்று தினங்கள் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுதலையானார் என்பது தெரிந்ததே.

அந்தச் சம்பவம் தொடர்பாகவே காமினி திஸநாயக்கா கைது செய்யப்பட்டார்.

கடத்தல் சம்பவம் தொடர்பாக இவ்வாண்டு தொடக்கத்தில் சிலர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் பொலிஸாருக்குக் கொடுத்த வாக்குமூலத்தில் அப்போதைய அரசில் முக்கிய இடம் வகித்த அரசியல்வாதி ஒருவரின் உத்தரவின் பேரில்தான் பேராசிரியர் கடத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பூமி தினம்

லண்டன், ஏப் 23

உலக பூமிதினம் நேற்று பல நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டது.

சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதைத் தடுத்து நிலம், நீர் வளி மண்டலம் ஆகியவற்றைப் பாதுகாப்பது, இதன் மூலம் பூமி கிரகத்தை அழிவில் இருந்து காப்பாற்றுவது ஆகிய இலட்சியங்களை வலியுறுத்தும் நிகழ்ச்சிகள் நேற்றுப் பல நாடுகளிலும் இடம் பெற்றன. [அ-எ]

## காமினி கைது விவகாரம்; அரசியல் அச்சுறுத்தலாம்!

தமக்கு எதிராக கடந்த சில தினங்களாக கொழும்பில் எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கை ஓர் அரசியல் அச்சுறுத்தலாகும் என்று காமினி திஸநாயக்கா எம். பி கூறியிருக்கிறார்.

பேராசிரியர் புல்ஜின்ஸ் கடத்தப்பட்ட சம்பவத்துக்கும் எனக்கும் எந்தவித தொடர்புமில்லை.

அமைச்சர் பதவி என்னிடமிருந்து பறிக்கப்பட்ட நாள் முதல் அரசியல் இம்சைக்கு நான் உள்ளாகி வருகிறேன்;

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் பதவியில் இருப்பவர்கள் தமது எதிரிகளை அகற்றும் முறையில் செயற்பட்டு வருகிறார்கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

—இவ்வாறு அவர் மேலும் சொன்னார். [உ-எ-5.

## ஜி. சி. ஈ. (உயர்தரப்) பரீட்சை இன்று ஆரம்பமாகிறது

### ஒத்துழைப்புத் தரக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 23

"இன்று ஆரம்பமாகவிருக்கும் ஜி. சி. ஈ [உயர்தர] விசேஷ பரீட்சை ஒழுங்காக— அமைதியாக — நடைபெற சகல தரப்பினரும் ஒத்துழைப்பு தரவேண்டும்."

— இவ்வாறு பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

★ பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், இணைப்பு அதிகாரிகள் ஆகியோருக்குப் பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

★ 68 நிலையங்களில் பரீட்சை நடைபெறும்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஒரு மாதத்தில் மட்டும் 130 படையினர் பலி!

விடுதலைப் புலிகள் நடத்தி வரும் தாக்குதல்களில்— கடந்த ஒரு மாத காலத்தில் மட்டும்—130 படையினர் உயிரிழந்துள்ளனர். என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கில் இந்தக் காலப் பகுதியில் பல நூற்றுக்கணக்கான படையினர் படுகாயமடைந்துள்ளனர். மற்றும் பலர் அங்கவீனம் அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## வரணி வடிசாலையில் தீ! மதுசாரம் எரிந்து நாசம்!!

வரணி வடக்கில் உள்ள சாராய வடிசாலையில் நேற்று முன்தினம் இரவு திடீரென தீ பற்றிக் கொண்டதால் பல லட்சரூபா பெறுமதியான மதுசாரம் [ஸ்பிரிட்] எரிந்து நாசமாகியது.

மதுசாரம் இருந்த தொட்டி திடீரென நெருப்புப் பிடித்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த சமயம் வடிசாலை ஊழியர்கள் வெளியேறியிருந்ததால் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது. வடிசாலைக் கட்டடம் பலத்த சேதமடைந்தது.

சாவகச்சேரி, கொடிகாமம், பளை பனம் பொருள் சங்கங்கள் இணைந்து இவ்வடிசாலையை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. [உ-117]

## மச்சந்தி முரளி



அங்காலை குடியேற்றம். இங்காலை [illegible] ரமைப்புப் போலை......!

## பாஷையூர் கடலில் மோதல்; மீனவர் ஒருவர் உயிரிழப்பு

பாஷையூர் கடற்பகுதியில் நேற்று அதிகாலை படகுகளில் சென்ற இவர் கைகலப்பில் ஈடுபட்டதில் மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து பாஷையூர் கடற்கரை வீதிப் பகுதியில் தங்கியிருந்த ஞானப்பிரகாசம் தர்மப்பிரகாசம் [ராஜன் - வயது 19] என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நேற்று அதிகாலை தமது ஒன்றுவிட்ட சகோதரர்கள் இருவருடன் பிளாஸ்டிக் படகு ஒன்றில் இவர் தொழிலுக்குச் சென்றதாகவும்-

அதிகாலை 2-30 மணியளவில் -இருட்டு வேளையில்- பாஷையூர் ஆற்றுப் பகுதியில் கிறகுடன் அருகருகே தரித்து நின்ற 2 படகுகளுடன் இவர்களது படகு மோதியது என்றும்-

இதனையடுத்து படகுகளில் இருந்தோர் கைகலப்பில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தடியால் தலையில் தாக்கப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

அனுபவம் வாய்ந்த உடைகள் (Cutting) வெட்டக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை. 24-4-91 அன்று புதன்கிழமை 9.00 மணிக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். 512, K. K. S Road. யாழ்ப்பாணம். [மனோகரா தியேட்டர் முன்பாக]

[16493]

### ரெயிலர் தேவை

சிறந்த முறையில் ஜீன்ஸ், ஷேர்ட் தைக்கக்கூடிய ரெயிலர்கள் தேவை மேலதிக விவரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்: மலேசியன் ரெயிலர்ஸ், இல. 1143A கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

[16556]

### மலிவு விற்பனை CLEARENCE SALE

20-4-91 முதல் 30-4-91 வரை A/L, O/L ஆண்டு 5 [புலமைப் பரிசில் பரீட்சை] வகுப்புகளுக்கான Tutes மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes 58 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[16484]

### விற்பனைக்கு

ஆரம்ப சுகாதாரவழிகாட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F. R. C. P., D C. H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவபீடம்] எழுதியது. கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவிபோன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கும் ஓர் அரியபுத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம், விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

[சி-4822]

### ரைப்ரைட்டர்கள்

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்தவும், புதிய, பழைய ரைப்ரைட்டர்கள் வாங்கவும், விற்கவும் தமிழ், ஆங்கிலம் [Stencils] வேலைகள் செய்யவும் பியூடோ 89/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

[சி-4827]

### கௌரி தொழிலகம்

சிங்கர் புதிய, பழைய தையல் இயந்திரங்கள், உதிரிப்பாகங்கள் வாங்கவும் மற்றும் உங்கள் பழுதடைந்த தையல் இயந்திரங்கள் திருத்தியும் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கௌரி தொழிலகம் ஆஸ்பத்திரி வீதி, [வைரவர் கோவில் முன்பாக] யாழ்ப்பாணம்.

[16476]

### விநாயகர் அருள் மில்

வாடிக்கையாளர்களின் நலன் கருதி மீண்டும் திறக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம். விலாசம்: விநாயகர் அருள் மில், இல. 8, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[16461]

### ஜோதிடம்

ராகு, கேது மாற்றமும் புத்தாண்டுப் பலன்களும் ரூபா 6/- எங்கும் விற்பனையாகின்றன. எண் ஜோதிடம், ரேகை சாஸ்திரம், சத்யசாயி பாபாவின் முற்பிறப்பு, மறுபிறவி வரலாறுகள், நான் யார்? ஆத்மஜோதி ஆனந்த ரகசியம், கமலா புத்தகசாலை, யாழ்ப்பாணம். எழுதியவர்: பேராசிரியர் சத்திய தாசன்.

[16490]

---

## வருடாந்த பொங்கல் உற்சவம்

ஏழாலை ''பெரியதம்பிரான்'' ஆலய வருடாந்த பொங்கல் உற்சவமும், தீக்குளிப்பும் எதிர்வரும் 24 - 04 - 1991 புதன்கிழமை இரவு வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

சி மகாலிங்கம்,
செயலாளர்.

[16498]

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### கனகநாயகி செல்வரத்தினம்

நீ பிரிந்து மூன்று ஆண்டுகள் சென்றதம்மா – நின் புன்னகை மறைந்த இவ்வுலகில் இன்பங்கள் கனவுகளாய், துன்பங்கள் நினைவுகளாய் உன் குடும்பம் துயருறுவதை நீ அறிவாய்: எனினும் இன்று உனக்கொன்று உரைப்போம் கேள்,

''மறைந்திலம் என்றும் உனை நினைப்பதற்கே''

உன் பிரிவால் துயருறும்:
அன்புக் கணவன் டாக்டர் செல்வரட்ணம்,
மகள் திருமதி கௌசலா,
மருமகன் சிவகுமாரன்,
பேரப்பிள்ளைகள் தாரணி, யோகேசன்.

ஆனைக்குட்டி வளவு,
தெல்லிப்பளை.

[16557]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 04 — 1930

மறைவு: 24 — 04 — 1991

### அமரர் இ. ஜெகநாதன்

[இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர்]
[RED - A. C. C. D.]

பல்வேறுபட்ட சமூகசேவை நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உதவிவரும், எமது போசகருமாகிய முன்னாள் கூட்டுறவு உதவி ஆணையாளர் அமரரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கை சாரணர் சங்கம்,
யாழ். மாவட்ட திரிசாரணர்குழு

யாழ்ப்பாணம்: [நல்லூர்] [16559]

---

## மூன்றாண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 28 — 10 — 1926

மறைவு: 26 — 04 — 1988

அமரர்

### மகேஸ்வரி திருநாவுக்கரசு

[யாழ். மத்திய கல்லூரி, இளைப்பாறிய ஆசிரியை]

திதி: 23 - 04 - 1991

'' அன்னையாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்''
என்னும் அமிர்தம் இதயத்தில் பெற்றுநல்
ஏற்றம் மிக்கதாய் வாழ்ந்து காட்டிய எம்
அன்புத் தெய்வத்தை மூன்றாண்டு போயினும்
ஆழ்ந்த சிரத்தையாலவரடி தொழுவம் யாம்.

— குடும்பத்தினர்.

62. மணல்தறை ஒழுங்கை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம். [சி-5121]

---

## கலை, வர்த்தக கல்லூரி

## (C. C. A.) A/L 91

யாழ். வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்

**DAY CLASS**

கலை, வர்த்தக வகுப்புக்கள்

### ஆரம்பம்: 24-04-1991

காலை 8-00 மணி

முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்படும்

[சி-4848]

---

மே தினத்தையொட்டி
தமிழீழ ஆய்வு நிறுவனம் நடத்தவுள்ள

## பாய்மர ஓட்டப் போட்டி விதிகள்

1. **பங்கு பற்றும் கலங்கள்:**
பிரிவு ரீதியாக, ஒவ்வொரு பிரிவிலும் எந்த வகையான கலங்கள் கூடுதலாக உள்ளனவோ அதைப் போட்டியில் பயன்படுத்தலாம்.

[அ] அளவுகள்:– நீளம், அகலம், தோற்றம், ஒரே வகையாகவும் சம அளவாகவும் இருத்தல் வேண்டும்.

[ஆ] கலங்கள்:– துடுப்புகள் / தாங்குதடி / மரக்கோல் எதுவும் பாவிக்கக் கூடாது. சுக்கான் மட்டும் பாவிக்கலாம். அதுவும் சம அளவானதாக இருக்க வேண்டும். [பாய் மரத்திற்கு தேவையான உபகரணம் தவிர]

2. **பாய்:**
சம அளவான ஒரே வகையான [உயரம், நீளம், அகலம்] தாக அமைய வேண்டும்.

3. **ஓட்டிகள்:**

[அ] மூன்று பேர் பங்கு பற்றலாம். இருவர் பாயைக் கட்டுபவர், மற்றவர் ஓட்டியாவார்.

[ஆ] வயதுக் கட்டுப்பாடு, ஆண், பெண் வேறுபாடு இல்லை.

4. போட்டி ஆரம்பிப்பதற்கு முன்பு பாயை விரித்துக் கட்டுதல் கூடாது.

5. **தூரம்:** ஒரு மைல்
மாவட்ட ரீதியாக: மரக்கலத்திலான பாய் மரம் போட்டியில் ஈடுபடுத்தப்படும்.

### துடுப்பு வலித்தல் போட்டி

1. **பங்கு பற்றும் கலங்கள்:**
பிரிவு ரீதியாக [பாய் மரப் போட்டியை ஒத்தது.]

[அ] அளவுகள்: [பாய் மரப் போட்டியை ஒத்தது]

[ஆ] கலங்களில்: துடுப்புகள் [துலாக்கை / மரக்கோல் / சவள்] பாவிக்கலாம். சுக்கான் பாவிக்கலாம்.

2. **பங்குபற்றுவோர்:**
ஐந்து பேர்: ஒருவர் ஓட்டி. இருவர் துடுப்பு வலித்தல்.

3. போட்டி ஆரம்பிப்பதற்கு முன்பு சுக்கான் பூட்டுதல் போன்ற ஆயத்தங்கள் செய்யக் கூடாது

[சி-5123]

---

## சுப்றா கல்வி நிலையம்

## [BECON கிளை]

பிரதான வீதி, சித்தன்கேணி.

### 91 A/L கலை, வர்த்தக

மீட்டல் - வினா - விடை வகுப்புகள்

### ஆரம்பம்: 23 - 04 - 1991

காலை 9-00 மணி

ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு வரதராஜன் |
| அளவையியல் | — | திரு. S.S. மனோகரன் |
| கணக்கியல் | — | திரு. சிவகுமார் |
| வர்த்தகம் | — | பிரபல விரிவுரையாளர் |
| தமிழ் | — | திருமதி மீரா |
| இந்து நாகரீகம் | — | திருமதி கிருஷ்ணா |
| புவியியல் | — | திரு. சண்முகராஜன் |

### 91 A/L தமிழ் துரித மீட்டல்

ஆரம்பம்: 23 - 04 - 1991 [செவ்வாய்]
மாலை 4-00 மணி

### 92 A/L புதிய பிரிவு ஆரம்பமாகின்றது

திருமதி மீரா

[4038]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தீர்வும் திருமலையும்

திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் வெளியேற்றப்பட்டு, சிங்கள மக்கள் குடியேற்றப்படுகிறார்கள் என்பது பழைய செய்தி. அவ்வாறு குடியேற்றப்பட்ட சிங்கள மக்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்புகளில் பதியப்படுகின்றன என்பது புதிய தகவல்.

பொதுவாக கிழக்கு மாகாணத்தையும், விசேடமாக, குறிப்பாக திருகோணமலை மாவட்டத்தையும் சிங்களப் பிரதேசமாக்கிவிட வேண்டும்; தமிழர்கள் தங்கள் தாயகம், சொந்தமண் என்று உரிமை கொண்டாட இடம் தரலாகாது என்பது சிங்களப் பேரினவாதத்தின் அடிப்படைக் கொள்கை!

அந்தக் கொள்கை, சுதந்திரத்துக்குப் பின்னர் அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த கொழும்பு அரசுகளால் படிப்படியாக, கட்டம் கட்டமாக, கனகச்சிதமாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. திருகோணமலைத் துறைமுகம் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தது, பொருளாதார நிலைச் சக்தி (Potential) உடையது என்பதால் திருமலை மாவட்டத்தை முற்றாகத் தமிழர்களிடம் இருந்து அபகரித்து விடுதல் வேண்டும் என்பதுவே சிங்கள அரசுகளின் உள்ளார்ந்த நோக்கம்.

தமிழர்களின் அரசியல் உரிமைகளை வழங்காமல் அடக்கி, ஒடுக்கி ஆள்வது அநீதியானது. அவர்களைக் கொல்வதும், வாழ்விடங்களை அபகரிப்பதும் அக்கிரமம் நிறைந்தது.

திருகோணமலையில், கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இன விகிதாசாரத்தைக் குறைத்து விட்டால், அதனையே நிரந்தரமாக்கி நிலை நிறுத்தி விடலாம் என்பது கொழும்பு அரசின் எண்ணம். அதன் பின்னர் தமிழர் தாயகம், வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற தமிழர்களின் நிலைப்பாடுகள் நியாயமற்றவை என்று உலகுக்குக் காட்டிக் கொள்ள வாய்ப்பாகும்.

திருகோணமலையை எடுத்துக் கொண்டால், 1988 இல் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களில் தமிழர்கள்: 36.4 வீதத்தினர்; சிங்களவர்: 33.6 வீதத்தினர். இப்போது புதிதாகக் குடியேற்றப்பட்டவர்களும் பதிவு செய்யப்படும் போது சிங்களவரின் விகிதாசாரம் உயரும். தமிழர்களின் பெயர்கள் நீக்கப்படுவதால் அவர்களின் விகிதாசாரம் வீழ்ச்சி காணும். திருமலையிலிருந்து ஒரு தமிழர் கூட நாடாளுமன்றப் பிரதிநிதியாக முடியாத ஆபத்து வந்து விட்டது என்பதே கணக்கின் முடிவு!

திருமலையில் மட்டுமன்றி மட்டக்களப்பு, அம்பாறையிலும் சிங்களக் குடியேற்றம் நடப்பதால், கிழக்கில் 1981 இல் 24 9வீதமாக இருந்த சிங்களவர் எண்ணிக்கை இப்போது 40வீதத்தை எட்டிப் பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்று வரும் போது, இலங்கை சுதந்திரம் அடைந்த போது [1948 இல்] கிழக்கில் இருந்த இனவிகிதாசாரம் கணக்கில் எடுக்கப்பட்டே தீர்வுக்கான வழிபாடு [Formula] உருவாக்கப்பட வேண்டும். அதுவே தீர்வின் பிரதான அடித்தளமாகவும் இருக்க வேண்டும். அதனை ஒதுக்கிவிட்டுத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இயலாது.

# யாழ். மாவட்டக் கல்வி குறித்து கோட்ட மட்டத்தில் முழு ஆய்வு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

யாழ் - மாவட்ட கல்வி முன்னேற்றம், அபிவிருத்தி குறித்து கோட்ட மட்டத்தில் முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்படவிருக்கிறது.

யாழ் - மாவட்ட கல்வி பிரச்சினை குறித்து கல்வி அதிகாரி திரு. எஸ். சிவானந்தன் தலைமையில் யாழ். கல்வி அலுவலகத்தில் கடந்த கூட்டத்தில் இந்த விடயம் முழுமையாக ஆராயப்பட்டது.

ஆசிரியர் பற்றாக்குறை, கல்வித்திட்டங்கள், மாணவர் நிலை, கிராமிய மூலவளங்கள் குறித்து முழுமையான ஆய்வு ஒன்றை மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

இந்த ஆய்வுகளைக் கொண்டு மூன்றாண்டுக் கல்வித்திட்டம் ஒன்றை வகுப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது [இ-3]

## கிரேஸிக்கு சாவகச்சேரியில் அஞ்சலி

தென்மராட்சி, ஏப். 23

பரப்புக்கடந்தானில் களப்பலியான லெப். கேர்ணல் கிரேஸின் புகழுடம்பு சாவகச்சேரி பொதுச் சந்தையில் வைக்கப்பட்டபோது பெரும் எண்ணிக்கையான மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

சந்தையில் இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் பாப்பா, சாவகச்சேரி வட்டப் பொறுப்பாளர் செல்வராசா உட்படப் பலர் உரையாற்றினர். [இ-117]

## அராலிப் பகுதி வயல்களில் சிறு தானியப் பயிர்கள் களவு

அராலிப்பகுதி வயல்களில் சிறு தானியப் பயிர்கள் திருடப்படுகின்றன.

இது தொடர்பாக அராலி மத்தி கிராமிய உற்பத்திக் குழுவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எவராவது பயிர்களை அறுத்துக் கொண்டு செல்வது கண்டு பிடிக்கப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், வயல்வெளிகளில் உள்ள தானியப் பயிர்கள் அறுவடை முடியும் வரை கால் நடைகளையோ, மாட்டு வண்டிகளையோ வயல்களினூடாகக் கொண்டு செல்லக் கூடாது எனவும் கிராமிய உற்பத்திக் குழுவினர் அறிவித்துள்ளனர். [இ-12]

### விவசாயக் கருத்தரங்கு

வட்டுக்கோட்டை திருஞான சம்பந்த வித்தியாசாலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு விவசாயக் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

திரு ச. முருகேசன் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் விவசாய உதவி ஆணையாளரும் கலந்து கொள்ளவுள்ளார். [இ-த-161]

## ஜப்பான் விஜயம் ஏமாற்றம் என்கிறார் கோர்பச்சேவ்

டோக்கியோ, ஏப்ரல் 23

தமது ஜப்பானிய விஜயம் ஏமாற்றத்தில் முடிவடைந்ததாக சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவ் நேற்று தெரிவித்தார்.

சோவியத் யூனியனால் இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது கைப்பற்றப்பட்ட நான்கு தீவுகளை மீண்டும் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று ஜப்பான் விடுத்துள்ள கோரிக்கை பற்றி பேச்சுக்களின் போது இணக்கம் ஏற்படவில்லை என்றும் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார உதவிகளும் ஜப்பானிடம் இருந்து கிடைக்கவில்லை என்றும் திரு. கோர்பச்சேவ் சொன்னார்.

ஜப்பானில் இருந்து திரு. கோர்பச்சேவ் தென்கொரியா செல்கிறார். அங்கும் அவர் பொருளாதார உதவி கோரி சோல் அரசுடன் பேச்சுக்களை நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## காரைநகர் அகதிகளுக்கு செஞ்சிலுவைச் சங்கம் நிவாரணம்

காரைநகர் அகதிகளுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்கியது.

வழக்கம்பரை அம்மன் கோவில் மடம், பண்ணாகம் கிளை 5, நெசவு மண்டபம் ஆகிய இடங்களில் வைத்து செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் லொறிகள் மூலமாக கொண்டுவந்த பொருள்களை விநியோகம் செய்தனர்.

உணவுப் பங்கீட்டு அட்டை மூலமாக பதிவுகள் செய்யப்பட்டன. [இ-28]

## தி.மு.க. - அ.தி.மு.க. மோதல் தமிழகத்தில் வலுக்கிறது

சென்னை, ஏப்ரல் 23

தமிழ் நாட்டில் தி. மு. க - அ. தி. மு. க தொண்டர்களிடையே தேர்தல் மோதல் ஆங்காங்கு இடம்பெற்று வருவதாக செய்திகள் வெளிவந்து உள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விழுப்புரத்தில் இடம்பெற்ற அ. தி. மு. க. - தி. மு. க. மோதல் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சில தினங்களுக்கு முன்னர் பாண்டிச்சேரியில் இடம்பெற்ற சண்டை ஒன்றின் போது தி. மு. க. தொண்டர் ஒருவர் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. [இ-எ]

## கொம்படிவெளிப் பகுதியில் தண்ணீர் மட்டம் குறைகிறது

கொம்படி வெளிப் பகுதியில் தண்ணீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதால் படகுச் சேவைகள் விரைவில் நிறுத்தப்படுமென அறியப்படுகிறது.

இதேவேளை டிராக்டர்களும் சைக்கிள்களும் கண்டிக்குளம் பாதையையே பெருமளவு பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக இருக்கிறது [இ-117]

## தென் ஆபிரிக்க கிரிக்கெட்: வெள்ளையர் - கறுப்பர் சங்கங்கள் இணையும்

கேப்டவுன், ஏப். 23

தென் ஆபிரிக்காவில் நிற அடிப்படையில் இயங்கிவரும் வெள்ளை இன கிரிக்கெட் சங்கமும், கறுப்புஇன கிரிக்கெட் சங்கமும் ஒன்றிணைந்து தேசிய கிரிக்கெட் சம்மேளனம் ஒன்றை அமைக்கும் முயற்சி வெற்றி கண்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜூன் 29 ஆம் திகதி முதல் தென் ஆபிரிக்காவில் வெள்ளை மற்றும் கறுப்பு இன மக்கள் அங்கம் வகிக்கும் ஒரே ஒரு தேசிய கிரிக்கெட் சம்மேளனமே இயங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனைத்தொடர்ந்து உலக கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் தென் ஆபிரிக்கா கலந்து கொள்ளும் தகுதியைப்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்க அரசு 21 ஆண்டுகளுக்கு முன்னர் விளையாட்டுத்துறையில் நிற வேற்றுமையைப் புகுத்தியது. அதனைத் தொடர்ந்து கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் தென் ஆபிரிக்கா கலந்து கொள்ளத் தடைவிதிக்கப்பட்டது.

விளையாட்டுத் துறையில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் நிறவேற்றுமை கைவிடப்பட்டு வருவதைத் தொடர்ந்து அடுத்த ஒலிம்பிக்ஸில் கலந்து கொள்ள தென் ஆபிரிக்காவுக்கு அனுமதி கிடைக்கும் வாய்ப்பு பிரகாசமானதாக இருப்பதாகக் கூறப்படுகிறது. [இ-எ]

## உணவு முத்திரைப் பொருளுக்கு அலையும் மாணவர்கள்

கிளிநொச்சியில் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவுக்காக வழங்கப்பட்ட ஜனவரி மாதத்துக்குரிய முத்திரைகளுக்கான உணவுப் பொருள்கள் இது வரை கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்படவில்லை.

பாடசாலை மாணவர்கள் கடந்த இரண்டு மாத காலமாக இந்த முத்திரைகளுக்குரிய பொருள்களைப் பெறுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அலைகின்றனர்.

எனினும் சங்கத்தில் பொருள்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றதாம் [இ-76]

# போராட்டத்தின் பெரும் பகுதியை கடந்து வந்து விட்டோம்

## கிளிநொச்சி அன்னைபூபதி தின நிகழ்ச்சியில் கோபி உரை

கிளிநொச்சி, ஏப்ரல் 23

தமிழீழப் போராட்டத்தில் பெரும் பகுதியை நாம் கடந்து வந்துவிட்டோம். மீதிப் பகுதியைக் கடக்க உங்கள் பூரண ஆதரவு தேவை.

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல், நிர்வாகப் பொறுப்பாளர் திரு. கோபி மேற்கண்டவாறு கூறினார்.

அன்னை பூபதியின் 3 ஆவது ஆண்டு நினைவு நாள் இறுதி நிகழ்ச்சிகள் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆசிரியை திருமதி செ. சோமசேகரம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

திரு. கோபி மேலும் பேசியதாவது:-

தமிழ் மக்களை [illegible] இல் சிங்கள மக்கள் [illegible] மையாகவும், இன உணர்வுடனும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அழிக்கப்படும் தமிழ் இனமாகிய எம்மிடம் உள்ள இன உணர்வு போதாது.

எம்மை அழிக்கும் நடவடிக்கையில் சிங்கள இனவெறி அரசு, பௌத்தபிக்குகள், இராணுவம், பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு கொண்டிருக்கின்றார்கள். அரசின் பாதுகாப்பு நிதிக்கு பணத்தை வாரி வழங்குகின்றார்கள்.

இதேபோல் எமது மக்களும் இன உணர்வுடன், ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். விடுதலைப் புலிகள் எந்த நாட்டினது உதவியுமின்றி தனித்து நின்று போராடிக் [illegible] தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பது இராணுவ முகாம்களைத் தகர்ப்பதும், இராணுவத்தைத் தாக்குவதும் மட்டும் அல்ல. ஆயுதப் போராட்டம் நடைபெறும் அதேவேளை எமது சுய பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பும் நடவடிக்கைகளிலும் நாம் ஈடுபடவேண்டும். அதற்கு மக்கள் ஆகிய உங்கள் ஆதரவு பூரணமாக எமக்குத் தேவை.

இப்படி அவர் கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் செல்வி குலமகளும் உரை ஆற்றினார்.

நிகழ்வின் இறுதியில் நாடகங்கள், கவிதைகள் போன்றன இடம்பெற்றன. சிறப்பு நிகழ்ச்சியாக "இந்த மண் எங்கள் சொந்த மண்" புகழ் பாடகர் சாந்தனின் விடுதலை கீதங்கள் இசை நிகழ்ச்சி இடம் பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டிருந்த வேளையிலும் கூட நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. [இ-76]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ப. நோ. கூ. சங்கங்களுக்கு இனி உடனுக்குடன் பணம்

யாழ்ப்பாணம், ஏப் 23
யாழ் மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்குரிய கொடுப்பனவுகளை உடனுக்குடன் வழங்க அரச அதிபர், வங்கிகள் மூலம் விசேட ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

உணவு முத்திரை, ஒய்வூதியக் கொடுப்பனவுகள் மற்றும் உணவுப்பொருள்களை ஏற்றி இறக்குவதற்கான கட்டணத்தை ப. நோ. கூ. சங்கங்கள் அரச அதிபரிடமிருந்தே பெற்று வருகின்றன.

ஆனால் திறைசேரியில் இருந்து பணம் அல்லது கட்டுநிதி உரிய நேரத்தில் கிடைக்காததால் ப. நோ. கூ. சங்கங்களுக்குரிய கொடுப்பனவுகளை அரச அதிபரால் வழங்க முடியாது இருந்தது.

அதனால் ப. நோ. கூ. சங்கங்கள் நிதி நெருக்கடி காரணமாக உரிய விதத்தில் வியாபாரம் செய்யமுடியாத நிலை இருந்து வந்தது.

புதிய ஏற்பாட்டின் பிரகாரம் ப. நோ. கூ. சங்கங்களுக்குப் பணம் வழங்குவதற்கு, கூட்டுறவு ஆணையாளர் யாழ் அரச அதிபருக்கு விசேட அதிகாரங்களை வழங்கியுள்ளார்.

அவற்றின் பிரகாரம்—

அரச நிதியில் பணம் இல்லாதவிடத்து பணம் வழங்கும்படி வங்கிக்கு அரச அதிபர் சிபார்சு செய்ய வேண்டும். வங்கி பணத்தை செலுத்தி விட்டு திறைசேரியில் பணத்தைப் பெறலாம். இதற்கான சுற்றுநிருபம் நேற்றுச் செயலகம் வந்து சேர்ந்தது. [அ 3]

## தபால்களை சேகரிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 23
வெளியூர்க் கடிதங்களை நாளை புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்பாக யாழ் பிரதம தபாலகத்தில் தபாலில் சேர்க்கும் படி பொது மக்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

தற்போது பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கும் 'வில்லி லிசி' கப்பல் நாளை மறுதினம் வியாழக்கிழமை கொழும்பு புறப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாளை மறுதினம் வரை தபால்களைச் சேகரித்து அக்கப்பலுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது
[இ-5]

## ஜி.சீ.ஈ....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ பரீட்சை நிலையங்களில் வெள்ளை, நீல நிறக் கொடிகள் பறக்கவிடப்படும்.

★ பரீட்சை மண்டபங்கள் அமைந்திருக்கும் பாடசாலை வளவில் சம்பந்தப்பட்ட பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் சுமார் 10 பேர் சுழற்சி முறையில் கடமையாற்றி பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பர்.

★ பரீட்சை மண்டபங்கள் அமைந்திருக்கும் பாடசாலைகளின் அதிபர்கள் அந்த மேலதிக மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வேண்டிய சகல ஏற்பாடுகளையும் கவனிப்பர்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். [இ-3-15]

## பாஷையூர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பட்ட நிலையில் கடலுக்குள் விழுந்த தர்மப்பிரகாசம் நேற்றுக் காலை கடலிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

உயிரிழந்தவருடன் தொழிலுக்குச் சென்றவர்களான பேதுருப்பிள்ளை ராஜன் [வயது 21], அவரது சகோதரர் வசந்தன் [வயது 24] ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருவதாக அறியவருகிறது.

## வடக்கு கிழக்கு....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
றன.

வடமத்திய மாகாணசபைக்குட்பட்ட—குருநாகல் மாவட்டத்தைச்—சேர்ந்தவர்களே இங்கு சிறிமாபுர, கமேதகம ஆகிய கிராமங்களில் குடியேற்றப்பட்டிருந்தனர்.

1987ஆம் ஆண்டு சேதமடைந்த இவர்களின் வீடுகளுக்குப் பதிலாகவே இப்பகுதியில் புனரமைப்பு நிதி மூலம் புதிய வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.

1987ஆம் ஆண்டுக் கலவரங்களை அடுத்து இந்தப் பகுதிச் சிங்கள மக்கள் அகதிகளாக திருகோணமலை பிரடெறிக் கோட்டையில் இராணுவப் பாதுகாப்புடன் தங்கியிருந்தனர்.

கட்டட புனரமைப்பு வேலைகளுக்கு குருநாகல் மாவட்டத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களும் இப்பகுதியிலேயே குடியேற்றப்பட்டு வருவதாகவும் அறிய வந்தது
[உ-8]


## கம்பியூட்டர் பயிற்சி

யாழ் - மல்லாகம் ஒருங்கிணைப்பட்டு
மானிப்பாயில் IDP
சேவை ஆரம்பமாகிறது.

BASIC, D-BASE-III+ COURSES

புதிய பிரிவுகள்: 28-04-1991

★ பதிவுகள் சலுகை முறையில் 10% கழிவுடன் ஏற்கப்படும்

Managing Director
K. THALAYASINGAM

Administrator
T. CHANDRAKUMAR

IDP Computer Centre
Manipay Road, Manipay.
[மானிப்பாய் ஆஸ்பத்திரி சமீபமாகவுள்ள மேல்மாடி]

★ மாணவர்களின் நலன்கருதி Spoken English வகுப்புகள் நடைபெறும்.

[இ-5119]


## வீரமரணம்

மன்னார் பரப்புக் கடந்தானில் கடந்த வெள்ளியன்று ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான இரண்டாவது லெப்டினன்ட் சிக்கோ [திருஞானசம்பந்தர் பரமேஸ்வரன்—யாழ் பிரவுண் வீதி] வீரமரணமடைந்தார். [உ]

## யானைகள் சுடப்பட்டன

கிளிநொச்சி, கோணாவில் பகுதியில் பயிர்களையும், உடைமைகளையும் நாசம் செய்துவந்த இரண்டு யானைகள் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டன

கோணாவில் யூனியன்குளம் குடியிருப்பு பகுதியில் வீடுகளைத் துவம்சம் செய்து கொண்டிருந்த போது இந்த இரு யானைகளும் சுட்டுக் கொல்லப்பட்டன.

## மனுத் தாக்கல்

பிரதமர் சந்திரசேகர் உத்தரப்பிரதேசம், பாலியா தொகுதியில் நேற்றுத் தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான லால் கிஷன் அத்வானி புதுடில்லியில் முன்னர் போட்டியிட்ட தொகுதியில் போட்டியிட மீண்டும் நேற்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்,

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 23
வேலணை கல்விக்கோட்டத்தைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை காலை 10 மணிக்கு வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டத்தில் சகல அபர்களையும் தவறாது பங்குபற்றும்படி வேலணைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். [உ]

## காமினி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
அந்த முக்கிய அரசியல்வாதி வெளிநாட்டில் இருப்பதாகவும் நாடு திரும்பினால் அவர் கைது செய்யப்படுவார் என்றும் கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

இங்கிலாந்தில் தங்கி மேற்படிப்பில் ஈடுபட்டிருந்த காமினி திஸாநாயக்கா கடந்த வியாழன் இரவு நாடு திரும்பினார். வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தின் புதிய கூட்டத் தொடரின் ஆரம்ப நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டார்.

அதன் பின்னர் சனியன்று பொலீஸாரால் அவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜராகும்படி அவருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. [உ-எ-5]

## கிளிநொச்சியில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
றும் அங்கு நடந்தது. அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி உட்பட பல பிரமுகர்கள் அங்கு உரையாற்றினர்.

பாண்டியன் குளம், மல்லாவிப் பகுதி மக்களின் அஞ்சலிக்கும் புகழுடல் வைக்கப்பட்டது

பின்னர் கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்பாக அமைக்கப்பட்டிருந்த விசேட மேடையில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக புகழுடல் வைக்கப்பட்டு, அங்கிருந்து கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு விடுதலைப்புலிகளின் இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் அன்று மாலை [illegible] சிதையில் தீமூட்டப்பட்டது. [உ]

# அராலி, நாரந்தனையில் நேற்று ஹெலித் தாக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 23
அராலித்துறைப் பகுதியிலும், நாரந்தனையிலும் ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று நண்பகல் தாக்குதல் நடத்தியது.

அராலித்துறைப் பகுதியை நோக்கி பிற்பகல் 3 மணியளவில் ஹெலி ஒன்று சுமார் 15 நிமிட நேரம் தாக்குதல் நடத்தியது. பொதுமக்கள் பதுங்கு குழிக்குள் தஞ்சம் புகுந்து கொண்டனர்.

பதுங்கு குழியை நோக்கி ஓடிக் கொண்டிருந்த வேளையில் அரசரட்ணம் சைலாநாதன் [வயது 31 - பருத்தித்துறை] என்பவர் சூடுபட்டுக் காயமடைந்தார்.

நாரந்தனையில் பிற்பகல் சுமார் 3-30 மணிக்கு ஹெலித் தாக்குதல் இடம்பெற்றது.

ஹெலி தாக்கியதைக் கண்டு பயந்து சைக்கிளைப் போட்டுவிட்டு சுவரால் ஏறிப் பாய்ந்த டேவிட் அன்ரன் பிரேமதாஸ் [வயது 27] காலில் காயமடைந்தார். [உ-15]

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்துரை துரைலிங்கப்பத்தர்

சின்னத்துரை - கமலபூரணம் ஆகியோரின் மகனும், சந்திரமலரின் அன்புக் கணவருமான துரைலிங்கம் 21 - 4 - 91 இல் காலமானார். அன்னார் உதயகுமார், விஜயகுமார், அசோக்குமார், நந்தகுமார், சாந்தகுமார் ஆகியோரின் தந்தையும், துரைராஜா, துரையம்மா, துரைராணி, கமலராணி ஆகியோரின் சகோதரரும், அரியமலரின் மாமனாரும், அபிநயாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 509, கே. கே. எஸ். வீதி, தட்டாதெருவில் உள்ள அவரது இல்லத்தில் 22-4-91 அன்று நடைபெற்று, பூதவுடல் கோம்பையன் மயானத்தில் தகனம் செய்யபபட்டது.

தகவல்:
சந்திரமலர் [மனைவி], விஜயகுமார், சாந்தகுமார்

[16563]

### திருமதி அந்தோனிப்பிள்ளை விக்ரோறியா

திருமதி அந்தோனிப்பிள்ளை விக்ரோறியா காலமாகி விட்டார். இவர் அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும். காலஞ் சென்ற கிங்ஸ்லி, பாலா, அன்ரன் பிலேவியன், ஜசிந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும். சவுரியாச்சி, செபஸ்திரியாம்பிள்ளையின் அன்புச் சகோதரியும், அஞ்சலாவின் அன்பு மாமியும் சுரேன், றுபேன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [23 - 04 - 91] செவ்வாய்க்கிழமை காலை 8- 00 மணிக்கு நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அ. ஜசிந்தா

நாரந்தனை,
ஊர்காவற்றுறை

[16565]

### க. சி. தம்பு

[விடத்தல் தீவு]

[திருக்கேதீஸ்வர பங்குனி உத்தர விழா உபயகாரர்]

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், விடத்தல் தீவில் வசித்தவருமாகிய க. சி. தம்பு காலமானார்.

இவர் சின்னாச்சியின் கணவரும், சோமசுந்தரம் [இ.போ.ச. மன்னார்], கணேசன் [விவசாயத் திணைக்களம்], திருமதி பரமேஸ்வரி செல்வராசா, சிவலிங்கம் [ஓமான்], ராமநாதன் [ஜேர்மனி], ஜெகநாதன் [டுபாய்], திருமதி ராஜேஸ்வரி ராஜரட்ணம் [கிராம சேவையாளர் மாந்தை] திருமதி கௌரீஸ்வரி விக்னகுமார் [சமூக சேவை திணைக்களம், யாழ்ப்பாணம்], கேதீஸ்வரநாதன் [இந்தியா], ஈஸ்வரி [சுவிஸ்], மகேஸ்வரி [இலுப்பைக்கடவை மகா வித்தியாலயம்] ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [23-4-91] நுணாவில்மேற்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்

தகவல்:
S. A விக்னகுமார் [மருமகன்]

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

[16566]

### சின்னப்பு பர்னாந்து

பாஷையூரைச் சேர்ந்த சின்னப்பு பர்னாந்து காலமாகிவிட்டார்.

இவர் சூசானாவின் அன்புக் கணவரும், றெஜி கிறிஸ்ரில்டா [சென். திரேசா ம. வி, கிளிநொச்சி], பெனான்சியஸ், றெஜிபிறிஸ்கா [ஜேர்மனி], புஸ்பா, பென்சலோ, வில்சன் [ஜேர்மனி]. ஜொபிற்றா ஆகியோரின் அன்புத் தந்தையும், சௌந்தரலிங்கம் [பரந்தன் இந்து ம. வி], எட்மன் [ஜேர்மனி], ஆன் வுளோறிற் றாபி, அன்ரன்எல்மோ ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு இன்று மாலை 3-00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:
ஆ. சௌந்தரலிங்கம்

[16511]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 332/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org